# யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து கொழும்புத்துறை வரை காணப்படும் ஒல்லாந்தர் காலக் கலைமரபில் கட்டப்பட்ட குடியிருப்புக்கள் - ஓர் ஆவணப்படுத்தல்


முழுப் பெயர்: ஜெயசீலசிங்கம் டிதர்சன்

பதிவு இலக்கம்: **EU/IS/2018/AC/117**

சுட்டெண்: **CS8517**



LIBRARY
14 MAY 2025
EASTERN UNIVERSITY, SRI LANKA.

FAC1566
Project Report
Main Library, Eastern University, Sri Lanka


இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணி சிறப்புக் கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அலகாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.


வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை


2024

# ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் அமைவிடமும், இங்கு இயற்கையாகக் கிடைத்த வர்த்தகப் பொருட்களும் பண்டுதொட்டுப் பல நாட்டவரையும் கவர்ந்து வந்தது. அவற்றுள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் வருகையும் அவர்களின் அரசியல், பொருளாதார, சமய, பண்பாட்டு மேலாதிக்கமும் இலங்கை வரலாற்றின் புதிய அத்தியாயமாகப் பார்க்கப்படுகின்றது. கி.பி 1658 – 1796 வரையிலான காலப்பகுதியில் ஒல்லாந்தர்கள் தமது ஆதிக்கத்தினை நிலைநாட்டினார்கள். இவர்கள் வடமாகாணம் உட்பட இலங்கையின் கடல்சார் மாகாணங்களில் தமது நிர்வாகத்தினை மேற்கொண்டனர். இதனால் இவர்கள் தங்களது நிர்வாக நோக்கங்களுக்காகவும் உயர் தேவைகளுக்காகவும் கட்டிடங்களை கட்டத்தொடங்கினர். இவ்வாறு இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகள், தேவாலயங்கள், வணிக மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் டச்சுப் பாணியிலே கட்டப்பட்டன. இக் கட்டிடக் கலையானது யாழ்ப்பாணப் பாரம்பரிய கட்டிடக்கலை மரபில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதுடன் ஒல்லாந்தர்கள் இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னரும் இம் மாற்றங்கள் தொடர்ந்தன. டச்சு செல்வாக்கின் தழுவலுடன் யாழ்ப்பாண பாரம்பரிய கட்டிடக்கலை ஒரு புதிய வடிவத்தில் மாற்றம் பெற்றது. யாழ்ப்பாணத்தில் இன்றிருக்கும் பழைய கட்டிடங்களில் பெரும்பாலானவை இம் மாற்றங்களுக்குச் சான்றாகும். யாழ்ப்பாணக் கோட்டை தொடக்கம் கொழும்புத்துறை வரையுள்ள பகுதிக்குள் உள்ள ஒல்லாந்தக் கலைமரபில் கட்டப்பட்ட குடியிருப்புக்களை அடையாளம் காண்பதும், அக் கட்டடங்களின் அமைப்பு, அதற்கு அவர்கள் பயன்படுத்திய மூலப்பொருட்கள், தொழில்நுட்பம், கலைமரபுகள் போன்ற பல விடயங்களை ஆராய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்விற்குத் தேவையான தகவல்களை முதல் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் என்ற அடிப்படையில் பெறப்பட்டன. அவ்வகையில் நேர்காணல்கள், கள ஆய்வுகள் முதல் நிலைத் தரவுகள் என்ற வகையில் அடங்க குறித்த இவ்விடயம் தொடர்பாக வெளிவந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் இரண்டாம் நிலைத்தரவுகளாக உள்ளன. இக் குடியிருப்புக் கட்டிடங்களில் ஒரு சமூகத்தின் சமூக, கலாசார மற்றும் வாழ்க்கை முறையினை பிரதிபலிப்பதனால் இவை பல்வேறு காரணிகளால் அழிந்து கொண்டிருக்கும் கட்டடக்கலை அம்சங்களை ஆவணப்படுத்தி அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவது முக்கியமான விடயம் என்பதனால் யாழ்ப்பாணக் கோட்டை தொடக்கம் கொழும்புத்துறை வரையான பகுதிக்குள் உள்ள ஒல்லாந்த கலைமரபில் கட்டப்பட்ட குடியிருப்புக்கள் எனது ஆய்விற்காக தெரிவு செய்துள்ளேன்.

திறவுச்சொற்கள் : ஐரோப்பியர்கள், குடியிருப்பு, கலை, ஒல்லாந்தர்கள், கோட்டை

# பொருளடக்கம்


| விடயம் | பக்கங்கள் |
| --- | --- |
| முன்னுரை | i |
| நன்றியுரை | ii |
| ஆய்வுச் சுருக்கம் | iii |
| 1. ஆய்வு அறிமுகம் | 1 - 6 |
| 2. ஐரோப்பியரின் யாழ்ப்பாண வருகை | 7 - 20 |
| 3. ஐரோப்பியர் காலத்திற்கு முந்திய குடியிருப்புக்கள் | 21 - 39 |
| 4. யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர்கால அரசியல், பொருளாதார, சமயம் மற்றும் பண்பாட்டு | 40 - 69 |
| 5. ஒல்லாந்தர் கலைமரபில் அமைந்த குடியிருப்புக்கள் | 70 - 98 |
| 6. முடிவுரையும் பரிந்துரையும் | 99 - 105 |
| உசாத்துணைகள் | 106 - 109 |
| பின்னிணைப்புக்கள் | v – vii |